ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1716/29 - 2011 ජූලි 29 වැනි සිකුරාදා - 2011.07.29
*1716/29 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*2010 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கத்தைக் கொண்ட மேல் மாகாண பிரதேச சபை அங்கத்தவர்களுக்கு கடமையின் நிமித்தம் வீட்டுக்கும் அத்துடன் நடமாடும் தொலைபேசி வசதிகளை வழங்குவதற்கான நியதிச் சட்டம்*

2010 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கத்தைக் கொண்ட மேல் மாகாண பிரதேச சபை அங்கத்தவர்களுக்கு கடமையின் நிமித்தம் வீட்டுக்கும் அத்துடன் நடமாடும் தொலைபேசி வசதிகளை வழங்குவதற்காகவுள்ள நியதிச் சட்டம் 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி நடைபெற்ற மேல் மாகாண சபைக் கூட்டத்தில் உடன்பாடு காணப்பட்டு 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி மேல் மாகாண ஆளுநர் எஸ். அலவி மௌலானா அவர்களினால் இணக்கம் காணப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, கல்வி, காணி,
மின்சாரம் மற்றும் எரிசக்தி மற்றும் உள்ளூராட்சி, மாகாண
நிர்வாகம், மனிதவலு, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார
ஊக்குவிப்பு தொடர்பான அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

மேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,
"சிராவஸ்தி மந்திரய",
கொழும்பு 7,
2011, யூலை 25.

### மேல் மாகாணம்

2010 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மேல் மாகாண பிரதேச சபை அங்கத்தவர்களுக்கு கடமையின் நிமித்தம் வீட்டுக்கும் அத்துடன் நடமாடும் தொலைபேசி வசதியை வழங்குவதற்கான நியதிச் சட்டம்

மேல் மாகாணத்தின் பிரதேச சபை அங்கத்தவர்களின் கடமையின் நிமித்தம் வீட்டுக்கும் அத்துடன் நடமாடும் தொலைபேசி வசதியை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் நியதிச் சட்டமாகும்.

இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசின் மேல் மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு நிறைவேற்றப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இந்நியதிச் சட்டமானது மேல் மாகாணத்தின் 2010 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மேல் மாகாண பிரதேச சபை அங்கத்தவர்களுக்கு கடமையின் நிமித்தம் வீட்டுக்கும் அத்துடன் நடமாடும் தொலைபேசி வசதியை வழங்குவதற்கான நியதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் மாகாண ஆளுநரின் கையொப்பமிடப்பட்ட திகதியின் பின்னர் வரும் லீப் வருடத்தின் சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

நோக்கம் மற்றும் பணி.

2. பிரதேச சபையினால், பிரதேச சபைக்காக தெரிவு செய்து நிமிக்கப்படும் அங்கத்தவர்களுக்காக கடமையின் நிமித்தம் வீட்டுக்கும் அத்துடன் நடமாடும் தொலைபேசி வசதியை வழங்குவதற்கான மற்றும் அதனைப் பாவிக்கும் பொருட்டு பிரதேச சபை நிதியிலிருந்து செலவு செய்யப்படுவது சட்ட ரீதியானதாகும்.

3. பிரதேச சபை அங்கத்தவர்களின் கடமையின் நிமித்தம் வீட்டுக்கும் அல்லது நடமாடும் தொலைபேசியின் விலைவிபரப்பட்டியலை தீர்ப்பதற்காக ஏற்படும் ஆகக்கூடிய செலவை அமைச்சரினால் இந்நியதிச் சட்டத்தின் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விதிகளின் மூலம் குறிக்கப்பட்டுள்ள அளவை கொண்டிருத்தல் வேண்டும்.

4. இந்நியதிச் சட்டத்தின் கீழ் பணி தொடர்பாக அமைச்சினால் விதிகளை ஏற்படுத்த முடியும்.

5. (1) அமைச்சரால் ஆக்கப்பட்ட விதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுவதுடன் அவை பிரசுரிக்கப்பட்ட பின்னர் அவை உடனே அங்கீகாரத்திற்காக மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படும்.

(2) அமைச்சர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட சகல விதிகளும் மாகாண சபையினால் அனுமதிக்கப்பட்ட பின்னர் வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக அறிவிக்கப்படுவதுடன் அவ்வாறு அனுமதிக்கப்பட்ட அறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படும்.

பொருள்கோடல்.

6. சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினால் அன்றி இந்நியதிச் சட்டத்தில் ''அமைச்சர்'' என்பது மேல் மாகாண உள்ளூராட்சி சபை எனும் விடயத்திற்குப் பொறுப்பாய் இருக்கும் மாகாண சபையின் அமைச்சர் என்று பொருள்படும்.

8- 368

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.